**IN THE COURT OF THE DISTRICT MUNSIF, SENDAMANGALAM.**

**O.S.No. 65/2020** **P.W.1**

Deposition of witness for solemnly affirmed by Tmt.S.Sangeetha, Assistant of this court on 10.11.2025 in accordance with the provision of the Act 1873.

| | |
|---|---|
| Name: | ராஜன் |
| Father Name: | பொன்னுசாமிகவுண்டர் |

**1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள பிராது சொத்துவிவரத்தில் உள்ள சொத்துவிவரமும், நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1, 2 ல் உள்ள சொத்துவிவரமும், அளவுகளும் ஒரேமாதிரியாகதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். தாவா சொத்துவிவரத்தில் உள்ள 2அயிட்டங்களில் 1வது அயிட்டம் எனது தகப்பனார் பெயரில் உள்ளது. 2வது அயிட்டம் எனது பெயரில் உள்ளது என்று சொன்னால் சரிதான். இரண்டு நீதிமன்ற ஆணையர்கள் தாவா சொத்தை பார்வையிட்டுள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். 2வது நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யக்கோரி யார் மனு தாக்கல் செய்தார் என்றால் எனது தகப்பனார். முதல் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கைக்கும், இரண்டாவதாக தாக்கல் செய்த அறிக்கைக்கும் வேறுபாடு ஏதாவது உள்ளதா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது.

நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கைகளில் குறிப்பிட்டுள்ள அளவுகள் கேட்டு தெரிந்துக்கொண்டேனா என்றால் வழக்கறிஞரிடம் கேட்டுத் தெரிந்துக் கொண்டேன் பத்திரப்படிதான் உள்ளது. நத்தம் சர்வே எண்ணில் உள்ள அளவுகளும், எங்களது பத்திரத்தில் உள்ள அளவுகளைவிட அதிகமாக உள்ளதா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. முதல் நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு தாக்கல் செய்த அறிக்கையை குறித்து ஆட்சேபணை ஏதேனும் தாக்கல் செய்துள்ளதா என்பது குறித்து எனது வழக்கறிஞர் மற்றும் எனது தந்தைக்குதான் தெரியும் என்றால் சரிதான். இவ்வழக்கில் பிரதிவாதிகள் எனது நிலத்தில் அத்துமீறி அஸ்திவாரம் பறிக்கக்கூடாது என பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவர்கள் எங்கள் நிலத்தில் அத்துமீறி அஸ்திவாரம் பறித்ததால் வழக்கை தாக்கல் செய்துள்ளோம்.

நீதிமன்றத்தில் இருந்து இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்காததால் பிரதிவாதிகள் அஸ்திவாரம் போட்டு வீடுகட்டியுள்ளார்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் வீடுகட்டி எவ்வளவு வருடம் இருக்கும் என்றால் சுமார் ஆறேழு வருடங்கள் இருக்கும். பிரதிவாதிகள் வீடுகட்டுவதை நான் தடுக்கவில்லை என்றால் நான் தடுக்கவில்லை. முதன்முதலில் பிரதிவாதிகள் வீடுகட்டுவதால் நாங்கள் தடுக்கவில்லை. பிரதிவாதிகள் வீடு கட்டக்கூடாது என்ற எண்ணத்தில்தான் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றும் தற்போது வீடுகட்டி முடித்துவிட்டதால் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல, எங்கள் நிலத்தில் அஸ்திவாரம் போட்டதால்தான் வழக்கை தாக்கல் செய்துள்ளோம். எனவே இவ்வழக்கு தள்ளுபடியாக் கூடிய ஒன்றாகும் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

Sd/–E.Ridhula Sd/–Rajan
DM,SDM